**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C)**

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT COURT, RANIPET**

Case No. **SC.No.20/2020**
Prosecution: **PW7**

| | |
|---|---|
| Name | **திரு.விஜய லோகேஷ்** |
| Father Name | **திரு.விஜய ராகவன்** |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **27.11.2025.**

சாட்சியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அந்த மனு Crl.Mp.No.995/2025-ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு 25.09.2025-ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

முப்பதுவெட்டி கிராமத்தில் என்ன சண்டை நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. 2-ம் எதிரி கண்ணன் என்பவரை ஆற்காடு நகர காவல் நிலையத்தில் கைது செய்து வைத்திருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் 2-ம் எதிரியை ஆற்காடு நகர காவல் நிலையத்தில் வைத்து பார்க்கவில்லை என்றால் நான் அந்த காவல் நிலையம் செல்லவே இல்லை. போலிசாரிடம் 2-ம் எதிரி என்ன வாக்குமூலம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது என்றால் நான் தூரத்தில் நின்றுகொண்டிருந்த போது போலிசாரிடம் 2-ம் எதிரி என்ன கூறினார் என்று எனக்கு தெரியாது. 2-ம் எதிரி இந்திய ராணுத்தில் பணிபுரிகிறார் என்பது தெரியுமா என்றால் இந்த வருட ஆரம்பத்தில் தான் தெரிந்துகொண்டேன். இரும்பு ராடுகள், முள்வேலி கட்டை ஆகியவற்றை எங்கிருந்து எடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் கையெழுத்து போட்ட ஆவணங்களில் போலிசார் என்ன எழுதியிருந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. அதை நான் படித்துப் பார்க்கவில்லை. நான் இந்த வழக்கில் இறந்து போன நடராஜன் என்பவரின் உறவினர் இல்லை. ஊர்க்காரர் ஆவேன். எனக்கு வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாமல் முதல் விசாரணையில் சொல்லிக்கொடுத்தப்படி சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையெழுத்து போட்ட ஆவணங்களில் எதுவும் எழுதப்படாமல் போலிசார் கேட்டுக்கொண்டதால் வெள்ளைத்தாள்களில் கையெழுத்து போட்டுக் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை;–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN
Date: 2025.11.27 16:53:06 -0500

I Additional District & Sessions Judge,
Ranipet.